Nirodh Factories

* 137 *Q.*--THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any candoms factories are to be set in (i) Mettur and (ii) Madurai ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) (இ) ஹிந்துஸ்தான் லேடெக்ஸ் லிமிடெட் என்னும் இந்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனம் தமிழ் நாட்டில் நிரோத் உற்பத்திசெய்யும் தொழிலகம் நிறுவ யோசித்திருக் கிறது. அந்தக் கம்பெனியைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் அரசாங்க அதி காரி ஒருவரின் துணையுடன் அந்தத் தொழிலகத்தை நிறுவ ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக மேட்டூர் உள்படச் சில இடங்களைப் பார்வையிட்டு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார். ஆனால் நிறுவும் இடத்தைப் பற்றிய இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட் டத்தில் ரப்பர் அதிகமாகக் கிடைக்கிறது. அங்கே அன்எம்ப்ளாய்டு லேப ரர்ஸ் அதிகம். தொழிற்சாலைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபற்றி மத்திய அரசாங்கம் முடிவு எடுக்கவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: ரப்பர் உறைகள் எவ்வளவுதூரம் பயன் படுத்தப்படுகின்றன, எவ்வளவு உற்பத்தியாகிறது, வருங்காலத்தில் இது இன்னும் எவ்வளவு தேவைப்படும் என்பது பற்றி மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறதா? மேட்டூரில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு சிபாரிசு செய்து, மேட்டூரில் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் தொழிற்சாலையைப்பற்றித் தான் நான் சம்பந்தப்பட்டிருக்கிறேன். மற்ற விவரங்களை வேறுதுறை யிலே கேட்கவேண்டும்.

திரு. கே வை செழியன்: தலைவரவர்களே, இந்தியாவிலே உற்பத்தி யாகின்ற இந்த நிரோத் குவாலிட்டி சரியில்லை என்றும், இந்த நிரோத்தைப் பயன்படுத்தினாலும் குழந்தை பிறந்துவிடுகிறது என்றும் சொல்கிறார்கள் நிரோத் பயன்படுத்திய பின்னாலும் குழந்தை பிறந்ததால் அந்தக் குழந் தைக்கு நிரோத்குமார் என்று பெயர் வைத்ததாகக்கூட அறிகிறோம். அதனால் சிலர் அதை பலூனாகக்கூடப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. ஆகவே, குவாலிட்டியை உயர்த்தி சிறப்பாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நிரோத் உப யோகிப்பதன் நோக்கத்தை பொறுப்புள்ளவர்கள் மக்கள் மத்தியில் எடுத் துச் சொல்லி, அதற்கு ஆதரவைத் தேடவேண்டும். மக்களிடம் தவறான